Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.14 witness for Prosecution**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.முருகன் | Taluk | : | |
| Father's/ Husband's Name | : | | Calling | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th day of November 2024.

(Accused present)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது நாமக்கல் மாவட்ட குற்றப்பிரிவில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.1.2015ந் தேதி 23.30 மணிக்கு பரமத்தி காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்த போது குட்டலம்பாறையை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் கலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் பரமத்தி காவல் நிலைய குற்ற எண்.15/2015 சட்டப்பிரிவு 304 இதச ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் அசலை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் பரமத்தி அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் வழக்கை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 (அ.சா.14). இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.